## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
### ஆறாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

### ஜூலை–ஆகஸ்ட் – 2022
### D061 இலக்கியத் திறனாய்வு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தேடுதல் என்பது எதன் அடிப்படைப் பண்பு?
2. இலக்கியம் குறித்த ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் அவர்களின் கருத்து யாது?
3. மரபு வழக்கில் கலைகள் எத்தனை?
4. தத்துவ இயல் அறிவு எதனை ஆய்வு செய்யத் தேவை?
5. பாராட்டு முறைத் திறனாய்வு என்றால் என்ன?
6. நெருக்கம் என்பதற்கு வழங்கப்படும் வேறு சொல் எது?
7. வடிவம் என வழங்கப்படுவது எது?
8. தொல்படிமவியல் அணுகுமுறை என்பது என்ன?
9. 'முட்டாச்சிறப்பின் பட்டினம்' எந்நூல் வரி?
10. இறையனார் களவியலுரையின் சிறப்பு யாது?
11. பத்துப்பாட்டு முழுமைக்கும் உரை எழுதியவர் யார்?
12. ம.பொ.சி. க்கு வழங்கப்பட்ட பட்டம் யாது?
13. மணிக்கொடி இதழின் சிறப்பு யாது?
14. Feminism – என்பதன் தமிழாக்கம் யாது?
15. புலப்பெயர்வு என்பதன் ஆங்கிலப்பதம் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. திறனாய்வாளருக்குரிய பணிகள் எவை?
2. கலைகளின் வகைகளைக் குறிப்பிடுக.
3. விளக்க முறைத் திறனாய்வின் படி நிலைகள் என்ன?
4. தொன்மம் என்ற சொல்லிற்குரிய பொருளையும் ,அதன் பிற பெயர்களையும் எழுதுக?
5. இலக்கிய உரைகளின் அமைப்புகள் எவை?
6. தமிழக மார்க்சியத் திறனாய்வாளர்களுள் சிலரைக் குறிப்பிடுக.
7. பெண்ணியம் குறித்த கோணங்கள் யாவை?
8. புலம்பெயர் படைப்பாளர்களில் சிலரைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) கலையும் இலக்கியமும் குறித்துக் கட்டுரைக்க.

   (அல்லது)

   (ஆ) திறனாய்வின் வகைகளை விளக்குக.

2. (அ) உரை குறித்த வரலாற்றினை விரிவாக எழுதுக.

   (அல்லது)

   (ஆ) திறனாய்வு முன்னோடிகளுள் சிலரைக் குறித்துக் கட்டுரை வடிவில் விடை தருக.

3. (அ) அமைப்பியல் வரலாறு குறித்து விவரி.

   (அல்லது)

   (ஆ) தலித்திய இலக்கியம் குறித்துக் கட்டுரை வரைக.

❋ ❋ ❋